அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 4

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br>**பக்கங்கள்:** 12 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

மாதிரிக் கேள்வித்தாள்

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் உள்ள கட்டத்தினுள் புள்ளடி (×) இடுக.**

1. தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர்

☐ மலாயர் ☐ தமிழர் ☐ ஐரோப்பியர்

2. இயல் இசை நாடகம் என்பன

☐ முக்கனி ☐ முத்தமிழ் ☐ மூவிடம்

3. நாய் குரைக்கும் அதுபோல நரி

☐ உறுமும் ☐ ஊளையிடும் ☐ கனைக்கும்

4. திருடர்களால் கவரப்படாத செல்வம்

☐ பணம் ☐ பொன் ☐ கல்வி

5. மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

☐ பன்னிரண்டு ☐ பதினெட்டு ☐ முப்பது

6. மாணவன் என்பது

☐ பலர்பால் ☐ ஒன்றன்பால் ☐ ஆண்பால்

7. 500 என்பதன் எழுத்து வடிவம்

☐ ஐநூறு ☐ ஐந்நூறு ☐ ஐந்னூறு

8. எழிலன் மாமாவுக்கு அஞ்சல் அனுப்பினான். இதில் அஞ்சல் என்பதன் ஒத்தபொருட் சொல்

☐ முத்திரை ☐ கடிதம் ☐ செய்தித்தாள்

9. வானொலியைக் கண்டு பிடித்தவர்

☐ சாமுவேல் மோர்சு ☐ மார்க்கோனி ☐ தோமஸ் அல்வா எடிசன்

10. நலம் + வாழ்வு என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ நன்வாழ்வு ☐ நலவாழ்வு ☐ நலம்வாழ்வு

11. பொருளின் செயலைக் குறிக்கும் சொல்

☐ பெயர்ச்சொல் ☐ வினைச்சொல் ☐ இடைச்சொல்

மாதிரித் தேர்வுத்தாள்

12. ஆடி முதல் நாள் கொண்டாடப்படுவது

☐ தீபாவளி ☐ வருடப்பிறப்பு ☐ ஆடிப்பிறப்பு

13. பாலாடை என்பதைப் பிரித்து எழுதினால்

☐ பால்+ஆடை ☐ பால்+லாடை ☐ பால்+அடை

14. நான் என்பதன் பன்மைச்சொல்

☐ நீ ☐ நாங்கள் ☐ நீங்கள்

15. தோழனுக்கு தோழி போல அரசனுக்கு

☐ அரசினி ☐ அரசி ☐ அரசள்

(15x1=15 புள்ளிகள்)

**2. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.**

1. காலிக்கும் / கதிரவன் / காலையில்

_______________________________________________

2. அன்பாக / இருப்போம் / நாம் / உயிர்களிடத்தில்

_______________________________________________

3. தைப்பொங்கல் / முதல்நாள் / கொண்டாடப்படும் / தை

_______________________________________________

4. எண்ணும் / போன்றவை / இருகண்களைப் / எழுத்தும்

_______________________________________________

5. மாணவர்களின் / பாராட்டினார் / ஆசிரியர் / திறமையைப்

_______________________________________________

(5X2= 10 புள்ளிகள்)



மாதிரித் தேர்வுத்தாள்

**3. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| துள்ளித்துள்ளி | சலசல | உயரஉயர |
| குடுகுடு | கலகல | ஓடி ஓடி |

1. ஆட்டுக்குட்டி ____________________ த் தாயிடம் ஓடியது.
2. பாட்டி ____________________ என நடந்து சென்றார்.
3. ஆற்றுநீர் ____________________ என ஓடியது.
4. தங்கை ____________________ எனச் சிரித்தாள்.
5. நான் ____________________ச் சென்றேன்.
6. பறவைகள் ____________________ ப் பறந்தன.

(6×1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

1. பெற்றோர் - ____________________
2. சுற்றுலா - ____________________
3. விலங்குகள் - ____________________
4. குடைகள் - ____________________
5. கணினி - ____________________
6. மொழி - ____________________

(6×1=6 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**5. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. நான் தமிழ்ப்பள்ளிக்கு ____________________ மிதியுந்தில் சென்றேன்.
(என்னுடைய, என்னால்)

2. நீ ____________________ விடுமுறைக்குத் தாயகம் செல்வாயா?
(உனக்கு, உன்னுடைய)

3. ஓவியப்போட்டியில் ____________________ முதற்பரிசு கிடைத்தது.
(எனக்கு, என்னுடைய)

4. இப்பையில் சில நூல்கள் உள்ளன. ____________________ ஒன்றை எடுத்துப் படி.
(இவற்றுள், அவற்றுள்)

5. அப்பா இரண்டு இனிப்புகள் வாங்கினார். ____________________ ஒன்றைத் தம்பிக்குக் கொடுத்தார்.
(இவற்றுள், அவற்றுள்)

6. கூடையில் பல பழங்கள் இருந்தன. ____________________ ஒன்றை எடுத்தேன்.
(அவற்றுள், இவற்றுள்)

(6×1=6 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்?

______________________________________________

2. பழமையான தமிழ்நூல்கள் இரண்டு எழுதுக.

______________________________________________

3. பெயர்ச்சொற்கள் நான்கு எழுதுக.

______________________________________________

4. உயிரெழுத்துகளுள் குறுகிய ஒலியுடைய எழுத்துகள் எவை?

______________________________________________

5. செல்வங்களுள் சிறந்த செல்வம் எது?

______________________________________________

(5×2=10 புள்ளிகள்)



மாதிரித் தேர்வுத்தாள்

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி ஆறு (6) சொல்லியங்கள் எழுதுக.**

1. தமிழ்மொழி
2. ஆடிப்பிறப்பு
3. எனது பிறந்தநாள்

மாதிரித் தேர்வுத்தாள்

(6×2=12 புள்ளிகள்)

## பகுதி – 2

### வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

போரில் தோற்றுப் போன மன்னன் ஒருவர் காட்டுக்குள் போய் ஒளித்து இருந்தார். தனது நாட்டை மீட்க முடியாமல் போய்விடும் என எண்ணினார். அதனால் அவர் மிகவும் சோர்வடைந்தார். அவரது படைவீரர்களும் சிதறிப் போயினர். அவர் இருந்த குகைக்குள் சிலந்தி ஒன்று வலை பின்னிக் கொண்டிருந்தது. அது ஒவ்வொரு முறை பின்னும் போதும் அது அறுந்து விழுந்தது. ஆனால் சிலந்தி தனது முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் மீண்டும் அது தனது வலையைப் பின்னிக் கொண்டே இருந்தது. முடிவில் அது அழகான சிலந்தி வலை ஒன்றைப் பின்னி முடித்தது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த மன்னன் புத்துணர்ச்சி பெற்றார். தனது படை வீரர்களை ஒன்று திரட்டினார். மீண்டும் படையெடுத்துச் சென்றார். தனது நாட்டை மீட்டார். இதனையே ஔவையார் ‘ஊக்கமது கைவிடேல்’ எனக் கூறியுள்ளார்.

1. மன்னன் ஏன் காட்டுக்குள் போய் ஒளித்தார்?

   ______________________________

2. மன்னன் எதை எண்ணிச் சோர்வடைந்தார்?

   ______________________________

3. சிலந்தி எங்கே வலை பின்னிக் கொண்டிருந்தது?

   ______________________________

4. சிலந்தி தனது வலையைப் பின்னி முடித்ததா?

   ______________________________

5. ‘ஊக்கமது கைவிடேல்’ எனக் கூறியவர் யார்?

   ______________________________

(5×2=10 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் நாட்குறிப்பைப் படித்து கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

**பூங்குழலியின் நாட்குறிப்பு**

வெள்ளிக்கிழமை

| நேரம் | விடயம் |
|---|---|
| 07:30 – 12:00 | பள்ளி |
| 12:30 – 13:30 | மதிய உணவு |
| 14:00 – 15:30 | நடனப்பள்ளி |
| 16:00 – 17:00 | நண்பியுடன் வீட்டுப்பாடம் செய்தல் |
| 17:30 – 18:30 | தம்பியுடன் விளையாட்டு |
| 19:00 – 20:00 | குடும்பத்தினருடன் இரவு உணவு |
| 20:00 – 20:30 | தொலைக்காட்சி பார்த்தல் |
| 21:00 | படுக்கைக்குச் செல்லல் |
| நாளை: தமிழ்ப்பள்ளி | |

1. பூங்குழலி 14.00 மணிக்கு நடனப்பள்ளிக்குச் செல்கிறாள். ( )

2. வெள்ளிக்கிழமைகளில் தொலைக்காட்சி பார்ப்பாள். ( )

3. பூங்குழலி சனிக்கிழமைகளில் தமிழ்ப்பள்ளி செல்வாள். ( )

4. 19:00 - 20.00 மணி பூங்குழலி இரவு உணவு உண்ணும் நேரம். ( )

5. பூங்குழலி 16:00 – 17:00 மணிவரை தம்பியுடன் விளையாடுவாள். ( )

(5×1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 06 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 12 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தோப்புத்தாள்